**சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**முன்னிலை: திரு.M.சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.,**
**சார்பு நீதிபதி, மானாமதுரை**
**2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 18ம் நாள் திங்கட்கிழமை**
**இடைக்கால மனு எண்.4/2024**
**இன்**
**அசல் வழக்கு எண்.126/2022**

மேரி .... மனுதாரர்/உத்தேச 6ம் பிரதிவாதி

/எதிர்/

1. விக்னேஷ்வரன்
2. உமா ...1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

3. கொள்ளிடம்
4. பாக்கியலெட்சுமி
5. சாகுல் ஹமீது
6. தனுஷ் கோடி
7. பாலசுந்தரம்

...3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது, இறுதி விசாரணைக்காக 06.08.2025ம் தேதி என் முன்னர் வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு . S.N.மகேஸ்வரன், அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு . C. இராஜகோபால், அவர்கள் முன்னிலையாகியும், 3 முதல் 7ம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:–

## உத்திரவு

இம்மனுவானது, மனுதாரர்/ உத்தேச 6ம் பிரதிவாதியை தாவா வழக்கில் 6ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு தாவா வழக்கை மேல்நடத்த வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) பிரிவு மற்றும் 151 ன் படி கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:**

வழக்கு சொத்தான புல எண் 120/1 விஸ்தீரணம் 5 ஏக்கர் புஞ்சை நிலமானது மனுதாரர் கணவருக்கு அரசாங்கத்தால் ஒப்படைப்பு கொடுக்கப்பட்ட சொத்து என்றும் அவ்வாறு ஒப்படைப்பு கொடுக்கப்பட்ட பிறகு மனுதாரர் கணவர் பெயருக்கு ஒப்படைப்பு பட்டா ஏற்பட்டு அதன் பிறகு UDR திட்டத்தில் மனுதாரர் பெயருக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றும் மனுதாரரும் அவரது கணவரும் அரசாங்கத்திற்கு வரி வகையறாக்கள் செலுத்தி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் இந்நிலையில் மனுதாரருக்கு தெரியாமல் தாவா சொத்திற்கு 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக பட்டா மாற்றம் செய்து, அதனடிப்படையில் 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி, 5ம் எதிர்மனுதாரர்/ 3ம் பிரதிவாதிக்கு பவர் எழுதிகொடுத்து அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் 5ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி TCP Limited. Chennai என்ற நிறுவனத்திற்கு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி விபரம் மனுதாரருக்கு தெரிந்து பட்டாவை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD)No.21831/2023–ல் மனு தாக்கல் செய்தார் என்றும் அந்த மனுவில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தகுந்த விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு கடந்த 08.09.2023ம் தேதி ஒரு உத்தரவு பிறப்பித்தது என்றும் அந்த உத்தரவின் அடிப்படையில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்களும் விசாரணை செய்ததில் மனுதாரரும் அவரது தரப்பில் எழுத்து முல வாதுரை தாக்கல் செய்தார் என்றும் அதில் TCP

Limited, தாக்கல் செய்த எதிர்உரையில் தாவா சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் O.S.No.126/2022 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது என்றும் மேலும் தாவா சொத்தினை 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெயருக்கு பதிவு செய்யப்படாத கிரையபத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது போல் பிராதில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அவ்வாறு மனுதாரர் எந்த ஒரு கிரையப்பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் எனவே மனுதாரர்/ உத்தேச 6ம் பிரதிவாதியாகிய மனுதாரரை தாவா வழக்கில் 6ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு தாவா வழக்கினை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**3) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்:**

தாவா 1 லக்க சொத்து எதிர்மனுதாரர் தகப்பனாரும், 1ம் பிரதிவாதியின் தந்தை வழியில் வந்த பூர்வீகச் சொத்துக்களின் வருமானம் மூலம் மனுதாரரிடம் இருந்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு பதிவு செய்யப்படாத கிரயைப்பத்திரம் மூலம் வாங்கப்பட்டது என்றும் தாவா 1வது லக்க சொத்தின் மதிப்பு பல லட்சங்கள் என்றும் எனவே மனுதாரரும் காலம் கடந்து எதிர்மனுதாரர்கள் குடும்பத்தாரருக்கு வேண்டாதவர்கள் தூண்டுதலின் பேரில், தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரரும், தான் லேட், லூர்துசாமி மனைவி மேரி என்பதை சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டவராவார் என்றும் மேலும் மேற்படி லூர்துசாமி குடும்பமும் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை நில ஒப்படைப்பு பெற்றதாக பிரஸ்தாபம் செய்ததில், எதிர்மனுதாரர்களின் முன்னோர்கள் கடுமையாக ஆட்சேபனை செய்து பின்னீடு மேற்படி நிலமும் எதிர்மனுதாரர்கள் குடும்பம் வசம் திரும்பி சில ஆவணங்கள் மூலம் வந்து

சேர்ந்தது என்றும் எனவே இம்மனு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது.

**5)** இரு தரப்பும் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு தெரியாமல் தாவா சொத்திற்கு 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெயரில் மோசடியாக பட்டா மாற்றம் செய்து, அதனடிப்படையில் 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி, 5ம் எதிர்மனுதாரர்/ 3ம் பிரதிவாதிக்கு பவர் எழுதிகொடுத்து அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் 5ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி TCP Limited. Chennai என்ற நிறுவனத்திற்கு பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் மேற்படி விபரம் மனுதாரருக்கு தெரிந்து பட்டாவை ரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD)No.21831/2023–ல் மனு தாக்கல் செய்தார் என்றும் அந்த மனுவில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் தகுந்த விசாரணை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறு கடந்த 08.09.2023ம் தேதி ஒரு உத்தரவு பிறப்பித்தது என்றும் அந்த உத்தரவின் அடிப்படையில் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அவர்களும் விசாரணை செய்ததில் மனுதாரரும் அவரது தரப்பில் எழுத்து முல வாதுரை தாக்கல் செய்தார் என்றும் அதில் TCP Limited, தாக்கல் செய்த எதிர்உரையில் தாவா சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் O.S.No.126/2022 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது என்றும் மேலும் தாவா சொத்தினை 3ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெயருக்கு பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது போல் பிராதில் குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அவ்வாறு மனுதாரர் எந்த ஒரு கிரையப்பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் எனவே மனுதாரர்/ உத்தேச 6ம் பிரதிவாதியாகிய மனுதாரரை தாவா வழக்கில் 6ம் பிரதிவாதியாக சேர்த்துக் கொண்டு தாவா வழக்கினை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும்

கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் பிரதிவாதியின் தந்தை வழியில் வந்த பூர்வீகச் சொத்துக்களின் வருமானம் மூலம் மனுதாரரிடம் இருந்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு தாவா 1வது இலக்க சொத்து பதிவு செய்யப்படாத கிரயைப்பத்திரம் மூலம் வாங்கப்பட்டது என்றும் மனுதாரரும், தான் லேட், லூர்துசாமி மனைவி மேரி என்பதை சட்டப்படி நிரூபிக்க கடமைப்பட்டவராவார் என்றும் மேலும் மேற்படி லூர்துசாமி குடும்பமும் எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை நில ஒப்படைப்பு பெற்றதாக பிரஸ்தாபம் செய்ததில், எதிர்மனுதாரர்களின் முன்னோர்கள் கடுமையாக ஆட்சேபனை செய்து பின்னீடு மேற்படி நிலமும் எதிர்மனுதாரர்கள் குடும்பம் வசம் திரும்பி சில ஆவணங்கள் மூலம் வந்து சேர்ந்தது என்றும் எனவே இம்மனு தள்ளுபடிக்குரியது என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு இரு தரப்பிலும் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மனுவினை பரிசீலனை செய்து பார்க்கின்ற போது தாவா சொத்தினை மனுதாரர் இந்த 3ம் எதிர்மனுதாரருக்கு பதிவு செய்யப்படாத கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளது போல் பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு இந்த மனுதாரர் எந்த ஒரு கிரைய பத்திரமும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும் எனவே இந்த மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து உத்திரவிட வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு பார்க்கின்ற போது அசல் வழக்கில் உரிய தீர்வு காண்பதற்கு ஏதுவாகவும் வழக்கு நடவடிக்கைகளின் எண்ணிக்கை பெருக்கத்தை தடுக்கும் விதமாகவும் இந்த மனுவினை அனுமதித்து உத்திரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக இம்மனு அனுமதித்து உத்திரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்திரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, என் முன்னிலையில் கணினியில் அடிக்கப்பட்டு, பின் என்னால் பிழைத்திருத்தம்செய்யப்பட்டு 2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18ம் நாளான இன்று என்னால் இந்த தீர்ப்புரை அவையறிய பகரப்பட்டது.

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.

மனுதாரர்/உத்தேச 6ம் பிரதிவாதி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்: இல்லை

**ஓம்.எம்.சண்முக கனி,**
சார்பு நீதிபதி,
மானாமதுரை.